ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட, கன்னியப்பாபிள்ளைபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின்மூலம் உள்கட்டமைப்பும், வெளி விளையாட்டு மைதானமும் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாங்கள் கொடுத்துள்ள. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். நான் பிறகு சொல்கிறேன். பேரவை விதி 110—ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கை அளிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பிறகு பேசலாம்.*

4. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய வருவாய் வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*